May. 1914. உ Reg. No. M. 1080.

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

TAMILIAN.

A Monthly Tamil Journal.

Pandit, S. Muthuswami Pillai, Managing Editor

Vol. II. | **1089** சித்திரை | No. 8.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மாதசரிதம்	225
2.	பெரியோர் வணக்கம்	227
3.	மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரவிளக்கம்	235
4.	நல்லகாலக்ஷேபம்	238
5.	மலேரியா	242
6.	நட்பு	250
7.	ஸ்ரீவிவேகானந்தரின் வேத வசனங்கள்	252
8.	சமாசாரத்திரட்டு	254

Printed at the 'BHASKARA' PRESS, and
Published by S. Muthuswamy Pillai, Trivandrum.

ரோஜா.

சீருலாவிய செந்தமிழ் பரவும் இப்பாரதகண்டத்தில் வசிக்கும் புத்திர புத்திரிகளின் மனதைச் சீர் திருத்தவும் புருஷனுக்கும் மனைவிக்கு மிருக்கவேண்டிய மனோரம்மியத்தை அவர்கள் மனதில் புகட்டவும் இப்புத்தகம் இன்றியமையாதது.

இதில் விளங்குவதெல்லாம் படிப்பவர் நாவிற்கு நயமும், கேட்பவர் காதிற்கு இன்பமும், மனதிற்கு உற்சாகமும் தருவதுடன் அறிவை விருத்தியாக்கி மாதர்கட்கு ஊழ்வினை சம்பந்தமே முதற்காரணமாயிருந்து சுகதுக்கமுண்டாகுமென்பதுணராமல் துக்கமுண்டாகுங்காலை கடவுளை துஷித்து வீணிற் பழிசுமப்ப தடாத வழுவெனக் கற்றுணர்ந்த கவிஞர்கள் புகலும் நீதி சாஸ்திர மனைத்தும் இன்னும் அநேக இன்றியமையா விஷயங்களையும் சேர்த்துக் கடிதங்களாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா ௪. தபாற்கூலி பிரத்தியேகம்

ஆநந்த மகிளா.

இப்புஸ்தகம் அநேக படங்களடங்கியது.

விலை தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 1. 0. 0.

இது மானிட உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதமெனும் சஞ்சீவியேயாகும். ஹிந்து ஸ்திரீ புருஷர்களுக்கு பிரியத்தையும் சந்தோஷத்தையுங் கொடுக்கத்தக்கது. ஸ்திரீ புருஷ சம்பந்தமான சாஸ்திரங்களையும் சரீர கோட்பாட்டையும் பூர்வத்தில் ஆரியர்கள் அனுஷ்டித்து வந்த முறையை இப்புஸ்தகம் விவரித்துச் சொல்வதோடு கூட ஆண் பெண் இவ்விரண்டு ஜாதியும் ஒருவரையொருவர் தமது இஷ்டப்பிரகாரம் சந்தோஷ சல்லாபஞ் செய்துகொள்ளும் விதத்தையுந் தெளிவா. எடுத்துரைபப்து. மூன்று புஸ்தகங்களுக்கு ஒரு புஸ்தகம் இனாம்

P. S. Roy
PONDICHERRY.

தமிழன் சந்தாவிவரம்.

	ரூ	அ	பை.
போஷகர்களுக்கு	4	0	0
சந்தாதார்க்கு	2	0	
பினாங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு	3	0	,,

குறிப்பு, (1)முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai. Managing Editor
The "TAMILIAN" Trivandrum.

உ

சிவமயம்.

தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை—பத்திராதிபர்.

தொகுதி II } 1089. சித்திரை மீ { பகுதி VIII

மாதசரிதம்.

கொண்டோம் ஜெயம்! விண்டோம் துயர் !! கண்டோம் வழி !!!

அன்பார்ந்த செல்வர்காள்!

இம்மாதமே நம் முயற்சி பயன்பெற்ற நன்மாதம். இம்மாதம் 23-உ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நமது காவலராகிய ஆண்டிப்பட்டி ஜெமீன்தார் ஸ்ரீமாந் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்களைத் தரிசித்து மூன்றுநாள் அவர்களோடு தங்கினேம். அக்காலத்தில் அவ்வள்ளல்பெருமான் நம்மிடத்துக்காட்டிய கருணைக்கும் நம் பத்திரிகையின் நன்மைக்காகச் செய்த உபதேசங்களுக்கும், உரைத்த உறுதி வார்த்தைகளுக்கும் நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லேம்! உண்மையில் அம்மூன்றுநாட்களுக்கும் இணையானநாட்களை நமது ஜீவிதகாலத்தில் இதுகாறும் கண்டிலம். என்னை! சென்ற 8 மாதங்களுக்குமுன் எண்ணிய கருமம் இனிது முடிப்பான் யாதொரு வழியுங்காணாது ஏங்கியேங்கித் தவித்த எம்மை முன்பின் அறியாதிருந்தும், எமது விருப்பப்படியே பொருளுதவி ஆதரித்த புண்ணிய புருஷரை—எம் கண்மணியனையரை—கண்கூடாகக் கண்டால் நாம் எடுத்தோதற்கரிய இன்பமடைதலும் வியப்பாமோ?

எம் கலி யாவும் நீங்கிக் களிப்பாங்கடலுள் மூழ்கியெழுந்து வந்தோம். அந்த மங்கல சம்பவத்தின் ஞாபகார்த்தம் தமிழன் சந்தாதாரின் உபயோகத்திற்காக ஒரு புத்தகசாலையும் ஸ்தாபித்திருக்கிறோம். அதனைப்பற்றிய விவரங்களெல்லாம் பிரத்தியேக நோட்டீஸ் மூலம் தெரிவிக்கப்படும்.

நமது பத்திரிகையின் மூன்றாவதாண்டு வருகிற ஆவணி மாத முதல் ஆரம்பமாகும். அக்காலத்தில் நமது பத்திரிகைக்கு இன்னும்

ஓராயிரம்

நூதன சந்தாதாரைச் சேர்க்கவிரும்பி அதற்காக முயற்சிசெய்துவருகிறோம். இஃது கேள்வியளவில் அநேகருக்கு முடியாமையாகத் தோற்றலாம். வாஸ்தவத்திலோ இவ்வண்ணம் ஓராயிரம் நூதன சந்தாதாரைப் பெறுவது அவ்வளவு அசாத்தியமல்ல. இப்பொழுது நமது சந்தாதாராயிருக்கும் ஒவ்வொருவரும் சிறிது முயற்சிசெய்து ஒவ்வொருபுதுச்சந்தாதாரைச் சேர்க்க முயல்வார்களானால் நமதெண்ணம் எளிதில் இனிது முடிந்துவிடும். நமது சந்தா நேயர்கள் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரதி திருவாசகமும் ஏதேனுமொரு தமிழ்நாவலும் பரிசளிக்கக் கருதியுள்ளோம். நூதனமாய்ச் சேரும் சந்தாநேயர்களுக்கும் ஒவ்வொரு பிரதி திருவாசகம் இனாமளிக்கப்படும்.

மூன்றாவதாண்டு ஆரம்பமுதல் "தமிழனை" டெம்மி 4-பக்கத்தில் (பக்கம் 1-க்கு 2-பத்தி) 6-பாரங்கொண்ட பத்திரிகையாய், நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்க எண்ணுகிறோம். இப்பொழுதுள்ள ராயல் 4 பாரத்துக்கு டெம்மி 5 பாரம் சரியாயிருக்குமாயினும் சந்தாநேயர்களின் நன்மையைக் கருதி 1 பாரங்கூட்டி 6 பாரமாக்க உறுதி செய்திருக்கிறோம்.

விஷயதானஞ் செய்வோருக்கும் பொருளுதவி செய்யப்படும்.

இச் சீர்திருத்தங்களால் நமக்கு அதிகச் செலவு ஏற்படுமாகையால் சந்தாநேயர்களெல்லாம் தத்தமக்கியன்ற உதவிசெய்து சந்தாதார்தொகையை விருத்திசெய்ய முயல்வார்களென்று நம்பப்படுகிறது.

பத்திராதிபர்.

பெரியோர்வணக்கம்.

"பெரியோர் வணக்கம்" என்பது பெரியோர்க்கு ஏனையோர் செய்கின்ற வணக்கம் என்று பொருள்படும். பெரியோராவார் "செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர்செயற்கரிய செய்கலாதார்" என்ற ஆன்றோர் வாக்கின்படி யாவருக்கும் செய்தல் ஒண்ணாத பெரிய காரியங்களைச் செய்து முடித்த திறத்தவர் என்பது பெறப்படும். இனி, இவ்வரிய செயல்கள் யாவை? இவைகளைச் செய்து முடித்தவர் எத்திறத்தவர் என்னும் ஆசங்கைகள் ஈங்கு எழுதல் கூடும். கூறுதும். (1) அவங்கள் ஆங்காரங் கோபம் அறவுந் தேய்ந்தியற்கையான, சுவங்களில் நடந்து நன்னூல் துறை நின்றோர் உயர்ந்த மேலோர்" என்று ஞானவாசிட்டத்தில் அருளியாங்கு உள்ளதை உள்ளவாறறிந்து, மும்மலம் களைந்து, பற்றற்றுச் சிவானுபூதிகளாய், பதியின் தன்மையை அடைந்து நின்று உன்னதமடைந்துள்ள மகா உத்தமர் ஆகுவர். இன்னும் வரிசைக்கிரமத்தில் (2) கடவுளின் தத்துவங்களைத்தாமும் உணர்தலுடன் உலகினுக்கும் உபகாரமாமாறு, குருமூர்த்தமாய் நின்று எடுத்தோதிக் குவலயம் பேணிநிற்குங் குரவர். (3) மதங்களை நிலைநிறுத்தற் பொருட்டும் சீர்திருத்தற்பொருட்டும், தம் உயிரையும் பொருட்படுத்தாது, அஞ்சாத நெஞ்சராய் உண்மைக்காகவே உழைத்து உயவர்வடைந்துள்ள உத்தமர். (4) கல்வி கரையிலவெனினும் தெய்வ அருளெனும் புணையால் மிதந்து கரைகண்டு தமக்குக் கடவுள் ஈந்த அறிவினுக்குப் பிரதியாகச் செவ்விய நூல்களையும் பெருங்காப்பியங்களையும் மண்டலத்தோருக்கு ஈந்து போந்த மகார்கள். (5) நன்னெறியோம்பிப்புன்னெறி தவிர்த்தும் செங்கோல் கோடாதும், புவியினைப் பேணி நிற்கும் புரவலர். (6) சொற்றிறம்பாக் கற்பினைச் சோர்வு படாது காத்துப் பெண்களின் நடுநாயகமென இலங்கி நின்றுள்ள நங்கையர். (7) தம் கடமையே பெரிய தர்மமென்பதனை உண்மையில் உட்கொண்டு, தம் புயவலியால் உயுத்தகளத்தில் அழியாப்புகழெய்தி நிற்கும் சுத்தவீரர். ஆகிய இன்னோரும் இவர் போன்ற பிறரும் பெரியோரெனக. இவரன்றியும், ஒவ்வொருவருக்கும் தம்மை ஈன்ற அன்னையும் தம்மைப் பாதுகாத்து வந்த பிதாவும், ஆபத்தில் உதவி புரிந்த அன்பனும், பெரியோராய் நிற்பர். இந்து ஒருவருக்

கொருவர் உள்ளத்துமட்டும் எழுகின்ற உணர்ச்சியின் பாற்ப்பட்டதா தலின், ஈங்கு விசேடமாக இம்மூவரையும் எடுத்துக்கூறுது விடுத்தோம். இனி வணக்கமென்பதியாதோ வெனில், இத்தகைய பெரியோரை அவர் உள்ளளவும் பணிந்து போற்றிப் புகழ்ந்து வழிபடுதலும் அவர் காயம் நீத்த பின்னரும் புகழ்ந்து வணக்கஞ் செய்தலுமாகும். இத்தகைய வணக்கத்தினுக்கே ஆங்கிலர் "Hero-Worship" எனப்பெயரிட்டிருக்கின்றனர். இன்று நான் எடுத்துக் கொண்ட தலைப்பின் கருத்தானது, இதின் முற்பகுதியையும் பிற்பகுதியையும் ஒருங்கே ஒப்பத்தழுவியே நிற்குமாயினும், முற்பகுதியானது நம்மில் ஒவ்வொருவருக்கும் உடன் பிறப்பாதலினுலும், நம் ஐங்குரவர் வணக்கத்தின் பாற்பட்டேநிற்குமாகையினுலும் போதிய போதநூற்களின் ஆதரவுபெற்றுப் பொலிவதாதற்பற்றியும், அத்தகைய வணக்கமொன்றில்லையேல் "எந்நன்றி கொன்றூர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னும் குறட்பாவில் குறிப்பித்திருக்கின்ற அழியாப்பழிக்கு நாம் ஆளாகவேண்டுமாதலினுலும், மேலும், நம்புலன்களே நம்மை அவ்வாறு தூண்டி நிற்றலினுலும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமாகின்றது. ஆதலின் அதனைக்குறித்து விரித்துப் பேசாமல், பிற்பகுதியாகிய இறந்தக் கண்ணும் பெரியோருக்குச்செய்யும் வணக்கத்தினைக்குறித்து மட்டும் சில மொழிகள் ஈங்கு பகர்வான் துணிந்தனன். அவைகளில் சொற்பிழை, பொருட்பிழை, வினைகாரப்பிழைகள் இருப்பினும், பிழைகளைப் புறக்கணித்து பயனிலவொறுத்துப் பயனுள கொண்டு என்னைப் பாராட்டுவீராக.

செல்வர்காள்! பெரியோருக்கு வணக்கஞ்செய்தல் எம்முறைபற்றியும் அடாதென்று இவ்வணக்கத்தினை போலிக்கல்வி மட்டுமேயுள்ள சிலர் முற்றிலும் வெறுத்துப் பேசியதை என் செவி கொதிக்கவும் உள்ளந்துள்ளவும் நான் கேட்டதினுலேயே இவ்விஷயத்தை இன்று எடுத்துப் பேசும்படி நேர்ந்தது. தம்மிலும் மிக்கு உயர்ந்தோரிடம் யாவரே உடல் ஒடுங்கி அன்பு பெருகி எத்துணையிலாயினும் ஆண்டான் அடிமைத்திறத்தாற் கட்டுண்டு நிற்காதவர்? இச்செயலானது எத்தேயத்தாருள்ளும் எச்சமயத்தாருள்ளும் இன்றும் யாதாமொரு ரூபத்திலாயினும் அளவிலாயினும் இருந்தே வருகின்றது. தம்மினும் பெரியோரைக் கண்டமாத்திரையில்—தலைமீதோ தோள்மீதோ அணிந்திருக்கும் உடைகளைத் தணிப்பதும், இருகையுந் தரைமட்டுங் குனிந்து உடல் வளைந்து நெற்றியில் ஒத்துவதும், வயிற்றுக்கெதிரோ, மார்புக்

கெதிரோ, வாய்க்கெதிரோ கரங்கூப்பித் தலை வணங்கிநிற்பதும் நம்மில் அநேகர் செய்துங் கண்டும் இருக்கக்கூடிய காரியங்களேயாகும். சில ஜாதியாருள், முழங்காலில் வீழ்வதும், தரையில் நெட்டுற வீழ்வதும், உடையின் நுனியையும் புறங்கையையும் அகலவின்று தொட்டு முத்தமிடுவதும், பாதத்தாமரையின் மகரந்தத்தை மூக்கால் முகர்ந்து நாவால் பரிசிப்பதும் வழக்கமெனவும் யாம் அறிவோம். இவைகளில், ஆராயுங்காலையில், பரிகசிப்பதற்கெதுவுந் தோற்றப்படவில்லை. பரிகசிப்பது நியாயமு மாகாது. ஏனெனில், இத்தகைய வணக்கத்தினுக்குரியநோக்கமானது மாந்தரின் இதயத்திலே அவருடைய நன்மைக்கென்றே எல்லாம் வல்ல இறைவன் அருளால் ஊன்றப்பட்டிருத்தல்வேண்டும். இஃதொன்றும் இல்லையேல் மாந்தரின் உள்ளம் வெறுக்கத் தக்கதேயாகும். என்னையோவெனில் இக்குணத்தினாலேயே, புகழுகின்ற தற்கிடமாய பெரியோரைப் புகழுகின்றவர் தம்மாசற்றுப் பின்னர் மனதாரப் பின்பற்றுதற்கும், புகழைத் தேடியேனும் இழிவை நீக்கவேனும் பெரிய காரியங்களில் ஏனையோர் ஊக்கத்துடன் தம் புத்தி முதலிய சாதனங்களை உபயோகப்படுத்தற்கும் பெரிய ஒரு ஹேதுவாயிருக்கின்றது. இக் கருத்தினையே ஆன்றோர் "தவங்களால் தெய்வநீரால் சாத்திரங்களினால் போகாப் பவங்களை உயர்ந்தோர் பாதம் பணிந்து பற்றறுக்கவேண்டும்" என்று ஞானவாசிட்டத்தில் கூறியிருக்கின்றார். இக்கருத்தினைத் தழுவியே ஐரோப்பாவைச் சேர்ந்த ஸ்காட்லாண்டு தேசத்தவரும், சென்ற நூற்றாண்டில் புகழ்பெற வசித்த பெரியோருமாகிய Thomas Carlyleஎன்னும் பிரபல சரித்திர தத்துவ நிபுணரும் கீழ் வருமாறு கூறியிருக்கின்றார். "We all love Great men; love, venerate and bow down submissive before great men; nay, can we honestly bow down to anything else? Ah! does not every true man feel that he is himself made higher by doing reverence to what is really above him? No nobler or more blessed feeling dwells in man's heart. And to me it is very cheering to consider that no sceptical logic or general triviality, insincerity and avidity of any Time and its influences can destroy this noble inborn loyalty and worship that is in man"—இதனை ஒருவாறு தமிழிலும் மொழிபெயர்த்திருக்கின்றேன். "நாமனைவருமே பெரியோரை நேசிக்கின்றோம்—பெரியோரை நேசித்து, அவரைக்கனப்படுத்தி, அவருக்குச்

சிர வணக்கஞ்செய்கின்றோம். உண்மையில் வேறு எதற்குமுன் இத்துணைக் களங்கமன்னியில் வணக்கஞ் செய்குதல் பொருந்தும். தன்னினும் உயர்வான வஸ்துவைக் கௌரவஞ் செய்தலினால் தானும் மேம்பாடடைகிறானென்பதை மாறுபாடில்லாத ஒவ்வொருவனும் தன்னில் உணராதிரான். மனிதனுடைய இருதயத்திலே இதினும் உன்னதமானதும் நன்மை பயக்கக் கூடியதுமான உணர்வு வேறு இருக்க முடியாது. காலாந்தரத்தில் ஏற்படக்கூடிய எல்லாவற்றையும் சந்தேசிக்குந் தன்மையதாம் தருக்கமென்ன, எதனையும் இழித்துப் பேசுந்தன்மையதான துர்க்குணமென்ன, நெஞ்சொன்று எண்ண வாயொன்று சொல்லும் பொய்மை என்ன, எதிலும் பண்டமிலையெனக் கொள்ளும் சுத்த சூன்யகுணமென்ன, அல்லது இவைகளின் உபா சக்திகளென்ன இவைகளுக்கெல்லாம் தப்பி— இயற்கையாய் மனிதனிடம் ஜனித்துள்ள பக்திக்கும் வணக்கத்துக்கும் உரிய நோக்கமானது, இடையூறெய்தாது நிற்குந்தன்மையை நினைக்குந்தோறும் எனக்கு மிக்க களிப்புண்டாகின்றது'' —என்பதே. மேற் கோள்களும் வேண்டுமோ! நாடோறும் வீதிகளிலும் மற்றும இடங்களிலும், பெரியோரெனப் பெயர்மட்டும் பூண்டு திரியுஞ் சிறியோருக்குங் கூட, உலகில் எத்துணை வணக்கம் செலுத்தப்படுகின்றதென்பது நன்கு கவனித்தோர் யாவருக்கும் வெளிப்படையே. உதரார்த்தமாக நடக்கின்ற வணக்கமும் எவரும் அறியாததன்று. இதுவே இங்ஙனமாகக் காலமறைவினாலும், தூரமறைவினாலும், சென்றொழிந்து நம் அநுதாபத்துக்கிடமாகி நிற்றல் பற்றியும், அவரின் செயலின் திறத்தால் நாம் அடைந்துள்ள நன்மைகட்குக் கடப்பாடுபற்றியும், நற்குணங்கள் மட்டுமே பன்மடங்கு பிரகாசிக்கவும், ஏனைய குணங்கள் துலங்காது மறையவும் பெற்று நிற்கின்ற இறந்தொழிந்த பெரியோரிடம் நமக்கு இதினும் பன்மடங்கான பக்தியும் வணக்கமும் பிறப்பது எத்துணையும் வியப்பாக வேண்டாவே! இத்தன்மையை, மேற்கூறிய Carlyle புலவர் ஒரு வரியில் விளக்கிச் சொல்லுகின்றார்.-"If a man was great while living, he becomes ten-fold great when dead. What an enormous Camera-Obscura is Tradition" —அதாவது "உயிருடனுள்ள காலையிலேயே பெரியோராய்க் காணப்படுகின்றவர், உடல் நீத்தபின்னர் பதின்மடங்கு பெரியோராய்க் காணப்படுவர். பரம்பரைச் சரித்திரத்தொடர்பானது இவ்விஷயத்தில்—இருட்டில் உருவத்தைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டும் ஒரு இயந்திரத்தை மிக்கு நிகர்த்து நிற்கும்

என்பதே. ஆகவே, காலமறைவினாலும் மற்றக் காரணங்களினாலும் தாம் யாரைப் பக்தி செய்தற்கு உடன்பட்டாரோ அவரிடம்-இயற்கையில் மனிதருக்குரிய சிறு குற்றங்கள் பல பரக்கக் கிடக்கக் காணினும் பக்தி செய்ய உடன் பட்டவர் அக்குறைகளை முற்றிலும் மறந்து, தம் கற்பனா சக்திக்கும் தம் ஆசைக்கும் இசையஅவர்களது அரிய குணங்களைப்பெருக்கிக்காண்டல் மாந்தரின் இயற்கை யென்பதை இவர் வெளியிட்டுள்ளார். இது எவ்வளவு உண்மை!

இனி, இப்பெரியோருக்கு அவர் உள்ளளவும் இறந்தக் கண்ணும் இங்ஙனம் வணக்கஞ் செய்தல் மாந்தருக்கு எக்காலத்தும் அமைந்து கிடக்கின்ற ஓர் குணமே யென்பதற்கு அத்தாக்ஷியாக மேற் கூறிய Carlyle புலவர் சரித்திர ஆராய்ச்சியின் பயனைச் சொல்லுகின்றதையும் ஈண்டு கூறுகின்றேன். "And what is notable, in no time whatever can they entirely eradicate out of living men's hearts admiration, loyalty, adoration, however dim and perverted it may be. Hero worship endures for ever, while man endures." இதனையும் தமிழில் ஒருவாறு சொல்லுகின்றேன். "இதில் இன்னும் விசேடமாகவுள்ள தென்னையோ வெனின், பிரமிப்பு என்னுங் குணத்தையேனும் எத்துணை மடமையான வழிக்கும் சில சமயம் இழுக்கின்ற வணக்க மென்னுங் குணத்தையேனும், மனிதருடைய இதயத்தினின்றும் ஒரு காலத்திலாயினும் வேருடன் களைந்து விட எவராலுஞ் சாத்தியப்படமாட்டாது. மனிதர் உள்ளளவும் எக்காலத்தும் இப்பெரியோருக்குச் செய்யும் வணக்கமும் நிலைத்தேயிருக்கும்" என்பதுவே. இந்த வாசகத்தில் உட்பொருளாய் அமைந்து கிடக்கின்ற சில கருத்துக்களானவை இவ்வணக்கத்தின் உற்பத்தி, வளர்ச்சி, முடிவு முதலியவைகளைத் தெளிவுபடக் காட்டுகின்றமையை ஈண்டு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். "Admiration, Loyalty, Adoration" தமிழில், தமக்கரியதாய ஒன்றினைக் கண்ட மாத்திரையில் அதில் ஒரு பிரமிப்பு, பின் அதனிடம் ஒரு ஆழ்ந்த பக்தி, அதினின்றும் பழகிப் பழகிக் காலாந்தரத்தில் ஒரு வணக்கம் ஆஹா! இதில் எவ்வளவு அரிய இரகசியம் அடங்கிக் கிடக்கின்றது! மனிதவியற்கையின் இயக்கத்தை இவர் எத்தனை முறையாய் எத்தனை அழகாய் வரித்த சித்திரம்போல் இம்மூன்று சொற்களின் அடுக்கால் தொகுத்துக் காட்டியுள்ளார். முதலில் பிரமிப்பு, இடையில் பக்தி, இறுதியில் வணக்கம்! இத்தன்மையை அநுபவத்தால் ருசித்திராதவர் எவருமே ஈங்கிராரென உறுதியாகச்

சொல்லுவேன். ஏனெனில், நட்பும் இத்தகைத்தன்றோ? பகைமையும் மாறுபட்ட முறையில் இந்த இயக்கத்தின் முறையைக் கொண்டதேயாகும்! புத்தியின் உதவி சற்றும் வேண்டாது, காய்தலும் உவத்தலும் காரணமின்றியேற்படுகின்றதும், ஏற்பட்ட பின்னர் அம்முறையில் வளர்கின்றதும், வளர்ந்து சிறிது காலையில் பழக்க வாசனையால் காரணமின்றியே முதிர்கின்றதும், நம் அநுதினக் காட்சி? அநுதின அநுபவம்! இக்கருத்தினையே மேற்குறித்த ஸ்காட்லாந்து தேசத்துப் பெரும்புலவர் வெளிப்படையாகவும் மற்றோரிடத்தில் கூறியிருக்கின்றார் " A Hero, of worth immeasurable, Admiration for whom transcending all bounds, became adoration." அஃதாவது " அவர் அளவுக்கடங்காத மாட்சிமையுடைய வராயிருந்தார். அவரிடம் ஏற்பட்டபிரமிப்பானது, வரையறை கடந்து வளரவே, வணக்கத்தில் வந்துமுடிந்தது." என்பதே.

உண்மையிங்ஙனமிருப்ப, அநேகர் மாந்தரிடம் இயற்கையிலேயே அமைந்து கிடக்கின்ற இக்குணதிசயத்தை முற்றும் மறந்தாராய், வணக்கத்துக்குப் பாத்தியப்பட்டு நிற்கின்ற பெயர்களில் பெரும்பாலர் உண்மையில் இருந்தவரில்லையெனவும் கவிகளின் கற்பனு சக்தியினின்றோ மதாசாரியர்களின் அகட விகடத்தினின்றோ பிறந்த பெயர்கள்பட்டுமேயெனவும் வினே பிதற்றித் திரிகின்றனர். அந்தோ!" பாவம்ஒருபுறம், பழி ஒருபுறம்" என்னும் பழமொழியானது இதற்கென்றே ஏற்பட்டது போலும்! வானமும் பூமியும் கடலும் மலையும் காற்றும் மழையும் உடுவும் பிறவுமாய உயிரற்ற வஸ்துக்களிடமே அவற்றின் அபார சக்தி நோக்கி மாந்தர் பக்தி செலுத்துந் தன்மை வாய்ந்தவரெனில், "அரிதரிது மானிடராதல் அரிது" என்றபடி மிக்கும் அரிய பகு[illegible] வகையாகிய மனிதராய தம்மினத்தில் ஏதாவது வியப்பது காணில அவர் பக்தியும் வணக்கமுஞ் செலுத்துதல் முற்றிலும் இயற்கையேயாகும் என்பதினை இவர் உணர்ந்தாரில்லை போலும்.

இது நிற்க, இனி இத்தகை வணக்கம் சகல தேசங்களுக்கும் சகல ஜாதியாருள்ளும் சகல காலங்களிலும் இருந்தே வந்திருக்கின்றது என்று முன்னர்ச் சொன்னேன். இதற்கு சில உதாரணங்களை எண்டு காட்டுதல் முற்றிலும் பொருந்துமென வுன்னுகின்றேன். ஆனால், வணக்கத்தின் தன்மையானது போற்றி வழிபடுதல் தொட்டுத்தெய்வீக வணக்கஞ் செலுத்துதல் வரையுமாகப் பலப்படிபட்டு நிற்

குமாதலின், நம் உதாரணங்களும் பலவகைப்பட்டே யிற்றல் வேண்டும். எனினும் என் அவகாசங் குறைந்தே யிருத்தல் பற்றியும், பெருக்கின் விரியும் ஆதலாலும், மதவிஷயமான அபிப்பிராயம் எதுவும் ஈண்டு தருதல் என் கருத்தல்ல வாதலினாலும் சில உதாரணங்களை மட்டுமே குறிப்பால் காட்டுகின்றேன்.

1. பற்றறுத்துப் பதவி பெற்ற பெரியோரில் நம் பட்டினத்தடிகளையும், மாணிக்கவாசக சுவாமிகளையும் சைவ சமய நாயன்மார்களையும், வைணவ மதத்து ஆழ்வார்களையும்,

2. குருவாயிலங்கிக் குவலயம் பேணிய குரவரில் நம் கௌதம புத்தரையும், பாலஸ்தீனத்து ஏசுவையும்;

3. மதம் நாட்டலினும் திருத்தலினுஞ் சீர்த்தி பெற்றோரில் நம் தேசத்து ஆசாரிய சுவாமிகள் முதலியோரையும், அரேபியா தேசத்துமகம்மது வெனும் பெரியோரையும், ஆங்கில தேசத்து Becket, Luther முதலியவரையும்;

4. கல்வியில் திறன் பெற்று மெய்ந்நூலியற்றிமேம்பாடுற்றாரில் நம் தேசத்துக் கம்பராழ்வார், தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், கிரீக் தேயத்து மகா கவியாகிய ஹோமர், இத்தாலியா தேசத்து Dante முதலியோரையும்;

5. அரசியல் வழுவாது நடாத்திப் புகழ் அடைந்தோரில் பார்மா தேசத்து Theba, நார்வே தேசத்து Odin, நம் தேயத்து விஷ்ணு அம்சமாகக் கருதப்படும் அரையர் அனைவர் முதலியரையும்;

6. கற்பிற் சிறந்த நங்கையர் வகுப்பில் கண்ணகி, துரௌபதை முதலிய உத்தமிகளையும்,

7. செருவில் புகழ் பெற்றிலங்குந் தீரரில் ஆங்கில தேசத்து ஆர்தர், டிராயைச் சேர்ந்த பேரிஸ் முதலாயினோரையும் சில உதாரணங்களாக, நான் சொல்லாமலே நீவிர் அறிவீர்.

கனவான்களே! இனி இது சம்பந்தமாக இறுதியில் இரண்டொரு விஷயங்கள் மட்டுஞ் சுருக்கமாய்ச் சொல்லி, என் உரையை முடிக்கின்றேன். பொறுமையுடன் குறைக்குஞ் செவி சாய்ப்பீராகவும். இத்தகைய பெரியோர் வணக்கத்தின் நோக்கமானது மாந்தரின் நன்

மைக் கென்றே அவர் இதயத்தில் தெய்வ அருளால் ஊன்றப் பட்டி ருக்கிறது என்று முன்னர்ச் சொன்னேன். உண்மையில், அளவுகட வாதும், அறிவு பிறழாதும், படோடோபம் அன்னியிலும் யாம் கற் றுள்ள உயர்ந்த தத்துவங்களுக்குப் பங்கமன்னியிலும் இவ்வணக்கத் தினை மாந்தர் செய்வரேல், இதினும் மிக்கு அவருக் குறுந்துணையா வது வேறெதுவுமில்லை. எவரைப் புகழுகின்றோமோ, அவரைப் பின்ப ற்ற நாம் முயலுகின்றோம். எவர் புகழப் படுகின்றாரோ அவரும், அவர் இறந்தபின் அவர் வகுப்பாரும் அவர் செயலின்கண் ஊக்கத் தையடைகின்றார். இது உலகுக்கு நன்மையாயிருகின்றது. ஆகவே இருபாலாருக்கும் உலகினுக்கும் இது உயர்வையே அளிக்கவல்ல ஒரு ஔஷதமெனக் கூறுமலே பெறப்பெறும். ஆயினும், உண்மையில் மாந்தரிலநேகர் இவ்விதமான வணக்கத்தினைப் பழுதுபடாது செய்து முடிக்குந்திறத்தவர் அல்லர். இது பற்றி, நமக்கு இஃதினால் விளை யும் நன்மையிலும் தீமையே இடையிடையே அதிகமாகக் காணப்படு கின்றது. அய்யகோ! தெய்வத்துக்கு நாம் செய்யும் வணக்க முறை மையே நம் பேர்அன்பு பற்றியும் அப்பெரியரின் பெருமை பற்றியும் காலவழக்கையிட்டும் நாம் இம்மாந்தரிற் பெரியோருக்குச் செய்யினும் ஆன்மாக்கள் அனைத்தினிடத்துமே தெய்வஃ பிரதி பலித்திருக்கின்ற தன்மையில் மட்டும் உபசார வழக்கில் தெய்விக மாகும். இவருக்கும், "எட்டுத்திசையும் பதினாறு கோளமும் எங்கும் ஒன்றாய், முட்டித் ததும்பி முழைத்தோங்குஞ் சோதி" யாம் எம்பதியாகும் அண்ணலுக் கும் உண்மையில் ஏற்பட்டிருக்கும் பேதாபேதங்களையும் நம்மனத்தின் ஒரு பால் இருத்துதல் வேண்டாவோ? இங்ஙனம் ஒரு நுண்ணறிவும் இங்ஙனம் மனதில் இருத்தும் வல்லமையும் நமக்கு உளவாமேல், இப் பெரியோர் வணக்கத்துக்குரிய நோக்கமானது உலகினுக்கு எத்தனை பயனை அளித்தல் கூடுமோ, அத்தனையும் அளித்து நிற்கும் என்பதில் எட்டுணையும் ஐயப்பாட்டில்லை. ஆகவே அறிஞர்காள்! அறிஞர்களா கப்பொலிவுற்றிருக்கும் நும்மில் ஒவ்வொருவரும், இவ்விதமான அறிவைப் பரவச் செய்யற்கு முன்வரல் வேண்டும். வருவீரேல் எல் லாம் சைவ மதமேயென ஒப்ப உலாவி வரும் மதுரை வீரன், இருளன் கருப்பன் மாடன் முதலியவர்க்குச் செய்யும் கடைத்திறமான அதம வணக்கமும் மற்றைய இழிகுண வணக்கங்களும் நாளடைவில் நம் தே சத்தில் நலியவும், அஃது நலியவே, உன்னதமானதும் ஒப்புயர்வில் லாததுமாய நம் சைவ சித்தாந்த சமயமானது எவ்வித இடையூறு

மெய்தாது பொலியவும் சிறிது காலத்தில் நாமனைவருங் காணுதல் கூடும். இஃது சத்தியம் ஆதலின் இப்பெரிய தொழிலினுக்கு நாம் முன்வருமாறு நடக்கு வேண்டிய அறிவையும், நல்லெண்ணத்தையும், மனோவூக்கத்தையும் நம்முள் ஒற்றுமையையும் ஈசன் அருளுவாராக!

V. M. கல்யாணசுந்தரம்பிள்ளை, B. A. B. L.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரவிளக்கம்.

(102-வது பக்கத் தொடர்ச்சி)

மேலும், சுவாமிகள் குதிரைவாங்குவான் குடகாடு நோக்கிப் புறப் பட்டக்கால், கொங்கணர், கலிங்கர் முதலாயவெண்ண முடிவில்லா தவர் சூழ்ந்திருக்க, எந்த சமயத்தும் நல்லாருக்கு நல்லார் துணை யென்பதுபோல், தமதருகில் தம்மையொத்த புலவர்களையே சூழவைத் தார்களென்று கூறும் வாதவூரடிகள் புராணச் செய்யுளால்,

["இத்திறமெழுந்தபடை யெங்கணும் நெருங்க, தத்துபரிமீதுள தமிழ்க் கவிஞர் சூழ "] அவர்களுக்குப் புலவரிடம் வாய்ந்த அன்பும் அவரது புலமையும் புலனும்.

பொய்யடிமை யில்லாத புலவரென்பது மாணிக்கவாசக சுவாமிக ளெனப் பொருள் கொள்ளுதல் பொருந்தாதென்று, ஸ்ரீ S. குருகுஹ தாஸ் பிள்ளையவர்கள் The Monthly Review யெனப் பெயர் புனைந்து திருவனந்தையில் நடந்துவரும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்கள் கருத்தையும் ஒரு சிறிது ஆராய் வோம். அவர்கள் கூறும் நியாயங்களாவன,

1. பொய்யடிமை யில்லாத புலவரென்பது, தனிப்பெயராகக் கொள்வோமாயின் அது திருவள்ளுவநாயனாருக்கு மிகவும் பொருத்த முடைத்தாம். அவரைப் பொய்யா மொழியார், பொய்யில் புலவர் என வழைப்பரன்றோ. கல்லாடத்தில் இறையனாரே அவரைப் புகழ்ந்து பேசினாரன்றோ.

2. நம்பியாண்டார் நம்பி உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் மாத்திரமன்று சமீபகாலத்தில் திருவாவடுதுறை மடப் பட்டம் சிவ ஞான சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக

நாவலர் முதலிய வித்துவ சிகாமணிகளும் அக்கருத்தல்லவோ கொண்டிருந்தார்கள்.

3. சுந்தரர் தாம் கூறிய திருத்தொண்டத் தொகையில் தனிப்பெயரோடு பொதுப்பெயர் விரவி வகுத்தாரென்று கெ. ஜி. சேஷய்யர் அவர்கள் நினைப்பது தவறு. அங்ஙனமாயின் "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று பொதுப்பெயரால் தொடங்கிவிட்டு தனி அடியார்களை அதே பாட்டில் கூறவில்லையா. ஆதலால், பொய்யடிமையில்லாத புலவரென்பது. தனியடியார்கள் பெயரின் துவக்கத்தில் வந்தால் அப்பதமும் தனியடியார்களையே குறிக்க வேண்டுமென்றில்லை.

---

4. சுந்தரர் ஒருபோதும் சந்தேகம் நேரலாகாதென்று நினைத்தே இயற்கையாயமைந்த பெயர் கொண்டு அடியார்கள் பெயர்குறித்தாரேதவிர, பட்டப்பெயர் கொண்டு குறித்தாரில்லை.

5. சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் சைவரேயாம். பலமதஸ்தர்களென்று அய்யரவர்கள் கூறுவது தவறு. என்று கூறுகின்றார்கள்.

எனதருமைச் சகோதரர்களே! இவ்விதச் சந்தேகங்களையெல்லாம் நான் நிவர்த்தி செய்வதாகப் பெருமிதம்கொண்டு புறப்பட்டதாக நீங்கள் நினைத்துவிடலாகாது. ஒன்றும் அறியாச்சிறுவன், அபிமான மிகுதியால் ஏதோ எழுதுவான் புகுந்தேன். மேலும், இந்தவிஷயங்களை வாதஞ்செய்த கனம் சேஷய்யரவர்கள், பொன்னம்பலம்பிள்ளையவர்கள், கோபிநாத ராவ் அவர்கள், குருதாஸ் பிள்ளையவர்கள் முதலியோர்ஆங்கிலத்தில் தருக்கித்து நின்றதால் தமிழ்மாத்திரம் கற்றுப்புலமைபெற்றவர்களின் அபிப்பிராயமு மறியலாமென்ற கருத்துடனே இந்த வியாஸ மெழுதப்படுகிறது.

பொய்யடிமையில்லாத புலவரென்பது திருவள்ளுவராகாதென்பது திண்ணம். அவர் பாடிய 1330 பாடல்களில் கடவுள் வாழ்த்துக்காகப் பாடிய பாடல்கள் பத்தே. அவையும் ஒரு மதத்தையும் தொடாமல் எல்லாருக்கும் பொதுவாகக் காண்கின்றன. அவர் உலகியல் நெறி நன்கு போதித்தாரென்பதும், ஆழ்ந்த அறிவும் நுட்பமும் பொருந்திய செய்யுளமைத்தாரென்பதும் எல்லாருக்கும் ஒப்ப முடிந்ததேயாம்.

எனினும் உலகமே மயக்கமென்றும் அப்பாசம் விட்டு நீங்கு தற்கு இறைவனருள் வேண்டுமென்றும் உபதேசிப்பான் அவதரித்த "சமயக்கணக்கரில்" ஒருவராய சுந்தரர், உலகியல் நெறியை பெரி தெடுத்துக் கூறும் திருவள்ளுவரை அடியார் கூட்டத்தில் சேர்த்தா ரென்றல் ஒரு சிறிதும் பொருந்தாது. இருதிறத்தார் அபிப்பிராய மும் வேறென்பது. "சமயக் கணக்கர் மதி வழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்" என்னும் கல்லாடச் செய்யு ளால் இனிது புலனும்.

இது இவ்வாறாக பொய்யடிமையில்லாத புலவரென்பது தனிப் பெயரன்று, பொதுப்பெயராம் என நம்பியாண்டார் நம்பி போன்ற பெரியோர் கூறியது இழுக்குரையாமோ வெனின் பெரியோராயினும் தவறுதலே நேராதென்று நினைப்பது தவறு. யானைக்கும் அடி பிச குதல் இயல்பேயாம்.

பத்துப்பாட்டில் வியவசாய விஷயமாகக் கூறும் பாடல்கள் ஒன் றில், பத்துப்பாட்டு மலையாள சம்பிரதாயமாயுள்ள வியவசாய நடபடி கூறியிருக்க, அந்நடபடியறியாத, உச்சிமேல் புலவர்கொள் நச்சினா க்கினியர் அவ்விதம் பொருள் கொள்ள அறியாது அப்பாடலை வலித் தும் நலித்தும் ஈர்த்தும் தமக்குத் தோன்றியவாறும்,தாமறிந்தவாறும் கீழ்க்கரை நாடுகளில் நடக்கும் விவசாய நடபடிகளுக்குத் தக்கவாறு பொருள் கொண்டாரன்றோ.

அவ்வாறே, திருக்குறட்கு விசேஷ உரை கூறுவான் புகுந்த, பரி மேலழகரும், "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே, உடம் பொடுயிரிடை நட்பு" என்னும் அருமைத்திருவாக்கில் (1) தனித் தொழிய. (2) புள். (3) பறந்தற்றே யென்று உபயோகித்திருக் கும் பதங்களின் பொருள் கவனியாது குடம்பை யென்பதற்கு முட்டை யெனப் பொருள் கொண்டார். அவ்வாறு முட்டையெனப் பொருள் கொள்வோமாயின், தனித்தொழிய யென்னும் பதம் வீணே கூறியதாகும்; முட்டையிலிருந்து குஞ்சு பறப்பது மின்று, குஞ்சுக்குப் புள் என்ற பெயருமில்லை. இது இவ்வாறாகவும், இவர் கருத்தே சரியென, வெண்கலப்பரி அடிபெயர்த்து இயங்கிற்றென ஒரு பொய் வரலாறும் கட்டி விட்டார்கள். ஆதலால் பெரியோர் எதேன் தவறு கூறிவிட்டாலும், வெள்ளரிப்பழத்துக்குப் பூண் பிடி ப்பது போல், அதற்கோர் நியாயம் கற்பிப்பது வழக்கம்.

மேலும் நம்பியாண்டார் நம்பி, அடியார்களின் வருணம் கூறுங்கால், அந்தணரை அன்னியரென்றும் ஒரு வர்ணாசிரமத்தில் பிறந்தோரை மறு வர்ணாசிரமக் காரரென்றும் கூறுகின்றார். அவர் அவ்வாறு கூறியதால், இதுவே நியாயமெனக் கூறுவாருமுண்டோ.

ஆதலால் அப்பெரியோர் கூற்றைப் பெரிதெனக் கொள்ள வேண்டாவெனவிடுக.

என். சுந்தரமய்யர்.

நல்ல காலக்ஷேபம்.

நமது வாழ்நாட்கள் சிறிதென்றுமுறையிடுகிறோ மல்லவா? இன்னது செய்யவேண்டுமென்று தெரியாமல் வீணாய்க் கழிக்கும் காலத்தை. யோசிக்குமிடத்து நமது வாழ்நாட்களைப் பெரிதென்றே சொல்லவேண்டும்! யாதொன்றுஞ் செய்யாமலும், வீண் காரியங்களைச் செய்தும், நமது கடமை யின்னதென்பதை யறியாமலுமிருந்து கொண்டு, வாழ்நாள் சிறிதென்று முறையிட்டபோதிலும், நமது செய்கைகளால் கோடிகாலம் இருப்பவர்களாக நடக்கிறோம்! இவ்வாறே மனிதர்கள் சொல்வதொன்றும் செய்வது வேறுமாயிருக்கிறார்கள். வாழ்நாட்கள் சிறிதென்று சொல்லிக் கவலையுற்றபோதிலும், நாம் வீணாகக் காலத்தைப் போக்கி விடவும் விரும்புகிறோமல்லவா! ஒருவன் வாலிபனாயிருக்கும்போது சீக்கிரத்தில் மனிதனாகவும், மனிதனான பின் தொழிலிற் பிரவேசிக்கவும், பிறகு சம்பத்தை யடையவும், அதன்பின் மேம்பாட்டைப் பெறவும், இச்சுகங்களையெல்லாம் அனுபவித்ததன் மேல் இவைகளை விட்டு நீங்கவும் விருப்ப முடையவனாகிறான். உயிர் வாழ்நாள் சிறிதெனக் கொள்ளப் பட்டிருப்பினும், அதன் பல பருவங்களில் ஒவ்வொன்றும் நீடித்திருப்பதாயும், ஓய்வற்றதாயும் காணப்படுகின்றது. பொதுவில் மனிதர்கள் நெடுநாள் வாழ விருப்பமுடையவர்களாயினும் ஒவ்வொரு பருவமும் சீக்கிரம் முடியவேண்டுமென்று இருக்கிறார்கள். தங்களுக்குச் சேரவேண்டிய கடனுக்காக வியாச்சியம் செய்திருப்பவர்கள், விசாரணைக் காலத்திற்கு முந்தின நாட்கள் சீக்கிரத்தில் போய் விடவேண்டுமென்று ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர். மணம்புரிவோன் தன் மனையாளோடு சேர்ந்து வாழும்படி நியமிக்கப்பட்ட நாளுக்கு முந்திய நாள்கள் நொடியிற் போகவில்லையேயென்று சஞ்சலப் படுகிறான். காலம் எவ்வளவு சீக்கிரத்தில் போய் விட்டலும இன்னும் சீக்கிரத்தில் போய்விட்டதாவென்று சந்தோஷப்படுகிறார்கள். இவ்வாறு சிலநாளைக்கழிக்க விரும்புவதுபோல் அநேக வருஷங்களையும் போக்க விரும்புகிறோம். பாலைவனத்தில் செல்லுமொருவன் அதைவிட்டு நீங்கி மருத நிலத்திற்குச் செல்ல விரும்புவதுபோல, நமக்கு சுகங்கிடைப்பதாய்த் தேன்றுங் காலத்திற்கு முந்திய நாட்களைக் கழிக்கவிரும்புகிறோம்.

ஒருவனுடைய ஆயுள்நாளை இருபது பங்காகப் பிரித்தால் அதில் பத்தொன்பது பங்கு யாதொன்றும் செய்யாமல் அல்லது சுகமேயில்லாமற் போக்கியதாய்க் காணப்படும். இது காலத்தைக் கிரமமாய் போக்காதவர்களைப் பற்றியே யல்லாமல் காலத்தினுபயோகத்தை யறிந்து யாதேனு மோர் தொழிலில் கையிட்டிருப்பவர்கள் விஷயத்தில் அல்ல. வீணில் காலம் கழிப்பவர்கள், அப்படிச் செய்யாமல் காலத்தைக் கிரமமாய்ப் போக்கும்படி அடியிற் கண்ட மார்க்கங்களை அனுஷ்டிப்பார்களென்று நம்புகிறோம். யாவராலும் நன்மையென்று கொள்ளப்பட்ட நற்செய்கைகளைச் செய்தலும், ஜனங்களின் ஐக்கிய வாழ்க்கைக்கு ஏதுவானவற்றைப் புரிதலும், காலங்கழிப்பதற்குள்ள பலமார்க்கங்களில் மிகவும் சிறந்தவை. மூடர்களுக்குப் புத்தி சொல்லித் திருத்துதல், வறியவர்களுக்கு உதவி செய்தல், துன்பமுற்றவர்களைத் தேறுதலை செய்தல், இன்னுமிவைபோன்றவைகள் இஷ்டமுற்ற யாவரும் செய்யவேண்டிய கடமைகள். மூர்க்கர்களைச் சாந்தப்படுத்துவதும் பாத்திரமறிந்து உதவி செயவதும், பொறுமைக் குணமுடையவர்களை யதினின்று மாற்றுவதும், கோபியை கோபத்தினின்று தணிப்பதும், துரபிமானமுள்ளவர்களைத் திருத்துவதும், விவேகத்திற்கடுத்தவைகளாயிருப்பது மன்றி இவைகளை பக்தியோடு செய்து வருபவர்களுக்குத் திருப்தியையுண்டு பண்ணத் தக்கவைகளாயுமிருக்கின்றன. பேச்சுத் துணையின்றித் தனித்திருக்குங் காலத்திலும் செய்யக் கூடிய தொன்றுண்டு. அதாவது நம்மைப் படைத்த கடவுளைத் தியானித்தல். கடவுள் எங்கும் வியாபித்து நமது செய்கைகளையும், நினைவுகளையுமறிகிறரென்பதை எப்போதும் மனதிலெண்ணி நடப்பவர்கள் மனமகிழ்ச்சியுடையவர்களாயிருப்பது மன்றி உயிருக்குயிரான சிநேகிதரிலும் சிறந்தவராகிய கடவுளோடு கூடியிருப்பதாகிய ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள். இவ்வாறு நடப்பவர்களுக்குக் காலம் போக்க வருத்தந் தோன்ருது. தனித்திருக்குங் காலமுமில்லை. தெய்வபக்தி யில்லாதவர்கள் காலத்தைக் கழிக்க வழியில்லாமல் திகைத்திருக்கும்போது தெய்வ பக்தியுள்ளவர்களோ, அதாவது அவஸ்தையின்றி நல்லறம் பூண்டு வாழ்ந்திருப்பவர்கள், மரணமடைந்த பின்னர் தாங்கள் நாடிய கடவுள் தங்களைக் கைவிடாமற் காப்பாரென்றும் நம்பிக்கையுடன் மறுமைப் பயனாகிய மோக்ஷத்தை நாடியிருப்பார்கள். அதனால் அவர்கள் ஆத்மா மகிழ்ச்சியடைந்திருக்கும். மனிதர் தாங்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப மோக்ஷ நரகங் கிடைக்குமென்பதைச் சிந்திக்குமளவில் இம்மையிலேயே காலத்தை சன்மார்க்கத்திற் போக்கவேண்டுமென்பது தானுப் விளங்கும். மனிதனுக்கு விதித்திருக்கும் சிறிது நாட்களைப் போக்கத் தகுதியான வழியேற்பட்டிருந்தும் அந்நாட்களின் பெரும் பங்கை யொன்றுஞ் செய்யாமற் போக்கியும் யாதாவது செய்வதாகிய சிறிது காலத்தைத் துன்மார்க்கத்தில் போக்குகிறவர்களையும் என்னென்று சொல்வோம். மனதை யொன்றிலேயே நிறுத்தி வைப்பது மிகவும் கடினமாகையால் குற்றமற்ற விநோதங்களிற் சிறிது காலம் போக்குவது அவசியம் தான். அப்படிச் செய்வதிலும் அதிகஆனந்தத்தை யளிக்கும் நல்ல சிநேகிதரோடு சம்பாஷணை செய்வது மேலாம். நன்மார்க்கத்

திலும் விவேகத்திலும் சிறந்த நண்பருடன் கூடியிருப்பதிலும் அதிக சந்தோஷத்தை யுண்டு பண்ணுவது வேறொன்றில்லை. அவர்களுடைய நட்பு மனக்கவலையை நீக்கி அறிவை விளக்கி ஞான மூட்டி சன்மார்க்கத்தில் யுத்தியை நிலை நிறுத்தி, பொறாமை ஆசைமோசம் கடுஞ்சொல் முதலியவைகளைப் போக்கி எக்காலத்திலும் துணையாக நிற்கும். நல்லவர்களுடன் நட்புக் கொள்வதே ஸ்வர்க சுகமாகுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் நல்ல நண்பர்கள் கிடையாதபொழுது கல்வியினால் பொழுது போக்கலாம். இக்கல்வி விஷயத்தை இவ்விடத்தில் எழுதப்புகின் விசேஷமாய் முடியுமாகையால் கல்வியும் காலங்கழிப்பதற்குள்ள மார்க்கங்களில் ஒன்றென்று குறிப்பாய்ச் சொல்லி முடிக்கலாயிற்று. தவிரவும், ஒருவன் இன்ன கல்வி தான் கற்க வேண்டுமென்று சொல்லவும் எவராலும் ஆகாது. ஏனென்றால் நமது பாரத நாட்டில் அவரவர் இயற்கையறிவிற்கெட்டிய கல்வியைக் கற்கவேண்டு மென்பதற்காகே , ஜாதிமத ஆசாரங்களும் 4 வேதங்கள், (உபவேதங்கள் 4) அவற்றைச் சேர்ந்த அங்கங்கள் 6, சாஸ்திரங்கள் 6, கலைகள் **64**. (இக்கலைக்குள் புராணம் 18, உபபுராணம் 18, ஆகம உபாகமங்கள் 28 பொருளாதார சாஸ்திரங்கள், விஞ்ஞான சாஸ்திரங்கள், இரஸாயந சாஸ்திரங்கள், இயற்கையின் உண்மை நூல்கள் முதலிய மேனாட்டார் போற்றும் நூல்களும் அடங்கும்) ஆகிய இவைகளும் சமுத்திரம் போல் கரை காண முடியாமல் விரிந்து கிடக்கின்றன. இதன் உண்மையை யாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே, ஸ்ரீ ஸரஸ்வதி தேவி, தனது செங்கமலக் கரத்தால் இன்னும் வீணாய்ப் பொழுதுபோக்காமல் வீணையில் பொழுது போக்குகின்றாள். ஆதலால், அவரவர் குலம் வயது, புத்திசாலித்தனம், முதலானவைகளுக்கேற்ப அவரவரே, நாம் இன்ன கல்வியில்தான் பொழுதைச் செலவிடவேண்டுமென்று நிச்சயிக்கவேண்டும். நமது பாரத மாதாவின் செல்வப் பொருள்களை பல புலியரசுகள் உறிஞ்சி விட்டாலும், கல்விப் பொருள்களை மட்டும் அவர்கள் கண்ணில் படாமல் நமது பாரதமாதா, காப்பாற்றிவைத்திருப்பதைப் பற்றி நாம் அவ்வன்னைக்கு ஆயிரம் நமஸ்காரஞ் செய்தாலும் அதிகமாகாது. டில்லி ' தர்பார் மண்டபம் 'எவ்வளவு தான் அழகாய்ச் சிங்காரித்திருந்ததாயினும் அவ்வளவு பெருமையையும் ஒரு ஸாதாரண மந்திரி வீட்டில் காணலாமென்று ஸ்ரீவால்மீகியும் வ்யாஸரும் சாதித்து விட்டார்கள். டில்லி தர்பார் எப்படியென்றால் " ஸ்ரீ ராம ஸபை." இந்திரப் பிரஸ்தம், தேவேந்திர ஸபை என்று இந்த வார்த்தைகளாலேயே சுட்டிக் காட்டவேண்டிய தாகின்றதே யன்றி இந்த மாதிரி பாரதநாட்டிலேயே கண்டதில்லை யென்று மறக்கமுடியுவா! ஏழையின் சொல் அம்பலமேறாதென்டாாகள். ஆயினும், கிழங்கு நோண்டிகளுக்கும்இக்காலத்தவர்இவ்வளவு கௌரவம கொடுத்ததைக் கேட்டு நாம் சந்தோஷத்தாற்பூரித்து விட்டோம். இது நிற்க, பொழுதைச்செலவிடும் விதத்தையறியாத அநேகர் செல்வத்தையும் செலவிடத் தெரியாமல் வீண் செலவில் தலையிட்டு ஓயாக்கவலைக்குஉறைவிடமாயிருக்கிறார் கள். அவர்கள் நமது இந்தியமன்னனும், பசியால் வருந்தி புறாவைத்துரத்திவந்த பருந்துக்குத் தனது தடைச் சதையைக் கீறியளித்து முடிவில் தன்

னேயே தன்னுடலையேயளித்து விட்டவனும் ஆகியசிபிச்சக்ரவர்த்தியின் சரித்திரத்தைக் கேட்பார்களானுல் அதன் உண்மையை அறிவார்கள். ஆனுல், அவர்களும் அவர்களால் நமது நாடும் இன்றில்லாவிட்டாலும் ஒரு காலத்தில் ஒவ்வொருவரால் எல்லா நன்மையையும் அடையும். எட்டாவது வயதில் எட்டுத் திக்கையும் ஜயிக்கும் அபார பாண்டித்யம் வாய்ந்த ஆதி சங்கரர் சரித்திரத்தைக் கேட்டும் எவன்தான், தானும் அந்தப்பிரகாரமே வித்வானுகி உலகம் போற்றும் உத்தமனுகவேண்டுமென்று விரும்ப மாட்டான்! கலியுக பீமராஜன் என்னும் பட்டம் பெற்ற, "ப்ரோபஸர் இராம மூர்த்தி நாயுடு தான இவ்வளவு பராக்ரமும் பெற்றதற்கு மூலகாரண மெல்லாம் தான் பால்யத்தில் படித்த பீமஸேனன் கதையே (பாரதமே) யன்றி வேறல்லவென்று சொல்லுகிருர். இதே மாதிரி, "தான் விரும்புகிற யாதிரியாகவே மனிதன் வாழ்கினருன்". வாழ்வான் வாழ்ந்தான் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் சரித்திரங்களிலும் தற்கால ரீதிப்படி பிரத்யக்ஷமாகவும் ஏராளமாக விருக்கின்றன! "மனம் போல் வாழ்வு" என்னும் பழமொழி மகா உத்தமமானது! இது நிற்க, இனி பொதுவாகப் பின்வருமாறு அவரவர் பொழுது போக்கலாம். அதாவது, வயதானவர்கள் பரோபகார தருமங்களின் பெருமையைப் புகழ்ந்து மறுமையிலும், இம்மையிலும மனிதன் நலம்பெறுவதைப் போதிக்கும் புராணங்களைப் பெரியோர் முகமாகக் கேட்டு அதன்படி நமது நாட்டினர்க்கு நன்மை புரிவது அவர்களுக்கு நல்ல பொழுதுபோக்காகும். சிறுவர்கள், பீமனைப் போன்ற சிறந்த போர்வீரன் கதைகளையும், அநுமானைப் போல் அஞ்சாத் தீரர்களின் சரிதைகளையும், காளிதாஸன், தண்டி முதலிய மேதாவிகளின் புலமையையும், இல்லை யென்னுத கர்னன், புலவர் போற்றும் போஜன், ஈரேழு கோடி யளித்த இரகு, முதலிய கொடையாளிகளின் உதார குணங்களையும், பத்ம பாதரைப் போன்ற குருபக்த சிகாமணிகளின் சரித்திரங்களையும் படித்துக் கேட்பது அவர்களுக்குச் சிறந்த பொழுது போக்காவதோடு சிறந்த படிப்பினையுமாகும். மாலையில் உபாத்யாயர்களுடன் மியூஸியங்களைக் காண்பதும் வெகு நன்று. நடுத்தர வயதுடையவர்கள், நமது நாட்டிலுள்ள புராதன ஞானிகளாகிய மநு, சுக்ரன், சாணக்யன் முதலியவர்கள்எழுதியஇராஜ்யதந்திர கிரந்தங்களையும், பாரத இராமாயணங்களையும் அடிக்கடி படிப்பதும் கேட்பதும் நல்லது!மத விஷயமாகக் குருட்டு யுக்தி யெடுத்துப் பேசும் புத்திமான்களும் உடம்புப் பிடிக்காரர்களும் ஒருவரையொருவர் தூஷிக்கும் மதவிசுவாஸிகளும் ஸ்ரீ பாகவதம் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸ விஜயம், ஸ்ரீவிவேகாநந்தஸ்வாமிகளின் உபந்யாஸங்கள், இவைகளைப்படிப்பதும கேட்பதும் ஸத்காலக்ஷேபமாகும். நல்ல புத்திமான்களாயுள்ளவர்கள், ராஜபாஷையுடன் தேசபாஷைகளையும், தேவபாஷைக் கிரந்தங்களையும் நன்ருகக்கற்று ஆராய்ந்தறிந்து தமது இராஜ காரியங்களிலும் பயபக்தியுடன் உழைத்து மோச நாசமின்றி பொதுஜனங்களிடமும் பூர்ண விசுவாசத்துடன் நடந்து கொண்டு தமது ஒழிவு நேரங்களில் ஏழை ஜனங்களின் குறைகளை விசாரித்து நன்மை புரிவதிலும், மாறுவேஷம் பூண்டாவது உலக நியாயங்களையும், தமது கீழ் உத்யோகஸ்தரின் ஒழு

ங்கான நீதி பரிபாலனத்தைப் பரிசோதிப்பதிலும், சுதேச ஜனங்கள், சுதேச பாஷை, சுயமதம் இவை முன்னுக்கு வருவதற்கான காரியங்களிலும், "அநித்யாவி சரீராணி பதரை விற்றுப் பணத்தை முடி" என்பது போல் புத்தக ஞானமாயில்லாமல் "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்," என்றபடி நம்முடைய குலத்தவர்க்கு தேசத்தவர்க்கு ஏழைகளுக்கு, திரவிய சகாயஞ் செய்வதிலும், அவர்களுடைய சரீரப்பிணி, மனப்பிணி, இவைகளை நீக்குவதிலும், தம்முடைய காலத்தைச்செலவிடவேண்டும.. இது தான் எல்லா ஜனங்களுக்கும், எல்ல மதத்தவருக்கும் ஸம்மதமானவழி. ஈஸ்வர சம்மதவும் இதுவே! ஒருக்கால் இப்படிக்காலத்தை யறிந்து செலவிட்டால் இக்கலியுகத்தின் பெயருக்கே ஹானி வந்தாலும் வரலாம்! வந்தால் வரட்டுமே!

T. K. ராமபத்ர கனபாடிகள்.

A LESSON ON MALARIA.

மலேரியா என்ற விஷசுரத்தைப்பற்றிய ஒரு பாடம்.

மலேரியா அல்லது விஷஜுரமென்பது அபாயகரமான ஒரு வியாதி; இதனால் பிரதிவருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு—முக்கியமாய் யௌவனபருவத்திலுள்ள ஜனங்களுக்கு—தேகதுர்ப்பலமோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுக்கடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்த வியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜுரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பீடித்து அவைகளில் பலவற்றை அழித்துவிடுகின்றன; இக்காரணத்தினல்தான் விஷஜுரத்தினல் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்துபோகிறான். மேலும் ஷெ கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்கமும் நோயும் ஏற்பட இதனல் காலக்கிரமத்தில் ஜுவரக்கட்டி உண்டாகிறது. விஷஜுரக்கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒருவகையானது வெகுவேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக்கொரு தடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொரு

வித கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டு மணிநேரத்துக்கொருதடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது, வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டு மணிநேரம் பிடிக்கிறது. இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜுரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக்காணும் ஜுரம் இன்ன விதமென்பது கொசுக் கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்னவிதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதையனுசரித்தாகும். முதல்வகையான கிருமியாயிருந்தால் அவனுக்குப் பிரதி தினமும் ஜுரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்று விட்டு ஒருநாள் ஜுரம் வரும் (இது சர்வ சாதாரணமானது); மூன்றாம் வகையானதாயிருந்தால், மூன்றுநாளைக்கொருதரம் ஜுரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும் நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால்தான் மேற்கண்ட ஜுரம் வரும்.

இம்மூன்றுவகைக் கிருமிகளில் ஒவ்வொருவகையைச்சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொருவிதமான ஜுரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்தக் கிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள், மற்றொருவகையைச் சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசினி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பக்ஷத்தில் கிருமியின் தோற்றத்தைக் கண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜுரம் கண்டிருக்கிறதென சாமர்த்தியமுள்ள ஒருவன் உடனே சொல்லக்கூடும்.

விஷசுரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்தக் கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக்கூடும்; ஒவ்வொரு இரத்தத் துளியிலும் அவை நூற்றுக்கணக்காயிருக்கின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நருக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரத்தத்துளிகளை உறிஞ்சிவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தை கொசுக்கள் உட்கொள்ளுகின்றனவோ அந்த மனிதனுடையஇரத்தத்தில்விஷசுரக்கிருமிகள் இருக்கும்பக்ஷத்தில், அந்தக் கிருமிகளில் அனேகம் அந்தக் கொசுக்களின் இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுவானது அனோபிலிஸ் (anopheles) என்னும் ஜாதியைச் சேர்ந்த ஒரு குறிப்

பிட்டவகையானதாயிருந்தால் அதன் இரைப்பையிலே ஷ கிருமிக ளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின் மூலமாய்த் துளைத் துக்கொண்டு அவ்வவயவத்தின் சவ்வுகளுக்குள் சென்று கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்களில் பிரவேசிக்கும். அந்தக் கொசு மனி தனைக் கடிக்கும்போது தன் உமிழ்நீர்க் கோளங்களில் அடங்கியிருப் பவைகளில் சிலவற்றை இவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது. அதனால், நம்மைக் கொசு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ் வளவோ பழக்கமாயிருக்கிற தினவு உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க் கோளத்திலுள்ள பதார்த்தத்திலேதான் விஷசுரக் கிருமிகள் இருக் கின்றன. ஆகவே இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன் னொரு மனிதனுக்கு ஷ கிருமிகள் மாற்றப்படுகின்றன. இந்தக் கிரு மிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகு வேகமாய் விருத்தியடை கின்றன. இவை போதுமான அளவுக்கு விருத்தியடைந்த பிறகு, அந்த மனிதனுக்கு சுரம் கண்டு, அதற்கப்புறம் அது பிரதி 24 அல் லது 48 அல்லது 72 மணிநேரங்களுக்கொருதடவை வந்துகொண் டேயிருக்கும்.

விஷசுர வியாதிஸ்தனைக் கொசுகடித்தவுடனே அவனிடத்தி லுள்ள கிருமியையும் சுரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்ற முடி யாது. கொசு விஷசுர இரத்தத்தை உட்கொண்டபிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர்க் கோளங்களில் புகுவதற்குமுன் பலநாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசு தேகாரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தி னவுடனே சுரம் காணாது. அந்தக் கொசு சில கிருமிகளை மாத்திரமே செலுத்துகிறது; அவைகள் சுரமுண்டாகும்படி செய்யக்கூடியவை களாயிருப்பதற்குமுன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாக வே ண்டும். சாதாரணமாக கொசுக்கடியுண்டானபிறகு முதல்தடவை சுரம் காணும்படி செய்வதற்குப் போதுமானபடி கிருமிகள் வளர்வ தற்கு 14 நாளுக்குக் குறையாமலும் 24 நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுக்களுமே விஷசுரத்தைப் பரவச்செய்யும் சக்தி யுடையவைகளல்ல. பல வர்ணமுள்ள இரக்கைகளையுடைய கொசுக்க ளில் ஆனொபிலேன் என்னும் சாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைக ளிலும் பெண் கொசுக்களுக்குமாத்திரமே இந்த சாமர்த்தியம் உண் டாயிருக்கிறது.

கொசுக்களில் மேற்சொன்னவகைபோக மற்றதும் மிக சாதாரணமுமான வகைக்கு குலிஸைன்ஸ் என்று பெயர். அவை விஷசுரத்தைப் பரவச் செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்காலில் கொண்டுவந்துவிடக்கூடிய ஒருவித கடும்சுரத்தையுண்டாக்கிற பிலேரியாஎன்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவச் செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுக்களையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக் காரியம் நிறைவேறும்.

வயதுவந்த அனோபிலேன் கொசுக்கள் சுவரின்மேல் தங்கும்போது தம் சரீரங்களை மூலைவாட்டாக வைத்துக்கொண்டிருக்கும்; அதாவது, தலையும், துதிக்கையும் (கொசுக்கள் கடிக்கும்வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து, கொசுவானது சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறு முள்ளைப்போல் காணப்படும்; இந்த அடையாளத்தைக்கொண்டு இந்தஜாதிக் கொசுக்களைத் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் கொசுக்கள் சுவரின்மேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர் மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன் கூன்முதுகுள்ளவைபோல் காணப்படும். அனோபிலேன் கொசுக்கள் இளங்கபில நிறமுள்ளவைகளாகவோ கருங்கபில நிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுக்கள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கருநிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் படைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். அனோபிலேன் கொசுக்களின் இரக்கைகளில் புள்ளிகளிருக்கும்; குலிஸைன் கொசுக்களின் இரக்கைகள் சாதாவாயிருக்கும்.

எல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழுதசையிலுள்ள (larvae) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24 மணி நேரமுதல் 48 மணிநேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக் கீழ் இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வரவேண்டியிருக்கிறது; இல்லாவிட்டாலவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால்நுனியிலுள்ள

ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தரையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமுடியாது. அவை குறைந்தது அரையங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனாலவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழு தரையிலிருக்கும் அனோபிலேன் சாதியைச்சேர்ந்த கொசுக்களை, அவைகள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளிப் பின்பக்கமாய் அசைவதையுங்கண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச்சேர்ந்த கொசுக்கள் நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக் குழாயிருக்கின்றது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் வளர்வதற்கு ஆறு முதல் பத்துநாள் வரையில் செல்லும்; சில சமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும். அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப்பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்தத் தசையானது இரண்டு நாள் முதல் நாலு நாள் வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரின் மேற்பாகத்தில் மிதந்து கொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இரக்கைகளுடன் கூடிய வயது வந்த பூச்சியாக வெளிப்படுகிறது; இந்தக்கொசு முழுவளர்ச்சியுடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்திசெய்வதற்கு வித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்கில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளி

லும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், சகலவிதமான தண்ணீர்க்கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக்கூடும். குறைந்தபக்ஷம் அரை அங்குலம் ஆழம் தண்ணீர்த் தேக்கமிருந்தாலொழிய அவைகள் ஆறுகள், க்ரோட்டன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாக முடியாது.

தண்ணீர்ப்பாத்திரங்களை மூடிவைப்பதினால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானவையாகும். தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள் உடைந்துபோன புட்டிகள் முதலியவைபோன்ற அநாவசியமான எந்த சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப் பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளைத்தூர்த்து ஷை குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும்; குட்டைகளைத் தூர்த்து விட முடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்கு தேத்தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரோஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழு தசையிலுள்ள கொசுக்களெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில ஏற்கனவே விஷசுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக்கூடுமாகையால், அக்கொசுக்களெல்லாவற்றையும் முயன்று கொல்வதே விவேகமானகாரியமாகும்.

தெரிந்திருக்கிறவரையில் விஷசுரம் பரவுவதற்குக் கொசுவே சாதனமாயிருக்கிறது. விஷசுரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷசுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் கொசுக்களில்லாதிருக்கும் பக்ஷத்தில் விஷசுரமிராது. ஒரு நபர் தன்னை எப்போதும் கொசு கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ளமுடியுமானால், அவனுக்கு விஷசுரம் ஒருநாளும் வராது. இக்காரணத்துக்காகவே விஷசுரப் பிரதேசங்களிலே, பிரயாணஞ்செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுவலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப் படுகிறார்கள்; ஆனால் அவர்கள் எப்போதுமே கொசு வலைகளுக்குள் இருக்கமுடியாதா

கையால் சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசு கடிக்கவே கடித்து சிற்சில சமயங்களில் அவர்களுக்கு விஷசுரம் காணவே காணுகிறது.

இதை மாற்றிச் சொல்லும்பட்சத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுக்களுக்கு விஷசுரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது; ஆகவே, ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக்காட்டுப் பிரதேசங்களில் அனோபிலீன் ஜாதிக்கொசுக்கள் நிரம்பியிருந்த போதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாகமுடியாதாகையால், எப்போதோ ஒருகால் அங்கேபோகுமொருவனை அவை கடித்தாலும் அவனுக்கு விஷசுரம் உண்டாகாது. விஷசுரம் வராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத் தெரிந்து கொள்ள இதன்மூலமாய் நமக்கு நேராக ஒரு உபாயம் கிடைக்கிறது. விஷசுரத்துக்குப் பேர்போன பிரதேசத்தில் பிரயாணஞ்செய்கையில் சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம்போடாமலாகிலும் தங்காமலாகிலும் இருக்கவேண்டும்; அவ்விடத்துக்கப்பால் அரை மைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவருடன் கூடவரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரத்தத்தில் விஷசுர கிருமிகள் ஏற்கனவே நிறைந்திருக்கக்கூடும். ஆனால் ஒரே இடத்தில் ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால்கூடக் கெடுதி உண்டாகாது; ஏனென்றால், அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுக்கள் அவனைக் கடித்தபிறகு குறைந்தது ஏழுநாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது. ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது அவை பின்தங்கிப் போய்விடுகிறபடியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தொத்து வியாதி சம்பந்தமுடைய பழைய கொசுக்களே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும்வரையில் விஷசுரக் கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது க்வினைன் என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒரு தடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால் சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் அப்படி செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷ

சுரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். விஷசுரம் வாஸ்தவமாய்க் காணும்போது, க்வினைன் அதிக அளவாக உட்கொண்டுவந்தால் அது குணமாகும்; ஆனால் அப்போது இரத்தத்திலிருக்கும் கிருமிகளையெல்லாம் அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்று மாதகாலம் தினந்தோறும் க்வினைன் ஒரு தடவை உட்கொள்ளவேண்டியதவசியமாகும். பெரியவர்கள் (எப்ஸம் ஸால்ட் என்னும்) மக்னீஷியம் ஸல்பேட் ஒரு ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் பத்து க்ரெயின் சேர்த்து சாப்பிடவேண்டும்.

விஷசுர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக்குழந்தைகளின் இரத்தத்திலும் விஷசுரக்கிருமிகள் இருக்கின்றன. இந்தக்கிருமிகளின் காரணமாக ஷை குழந்தைகளில் பலருக்கும் சுரக்கட்டி உண்டாயிருக்கும். விஷசுரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் சுரக்கட்டி உண்டாயிருக்கும் சகலர்களுக்கும் மூன்றுமாதகாலம் தினந்தோறும் க்வினைன் கொடுத்து வரவேண்டும். அப்படிச் செய்யும்பட்சத்தில் அவர்களுக்கு விஷசுரம் பூர்த்தியாய் குணமாய்விடும்; ஆனால், அவர்களை மறுபடியும் கொசுக்கடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக் கொசுக்களையும் அழித்து விடுவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(1) விஷசுரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்குமொருவனுக்கு கொசுவினால் பரவுகிறதேயொழிய, தெரிந்தவரையிலும் வேறெந்த மூலமாகவும் பரவுகிறதில்லை.

(2) ஆகையால், கொசுக்களில்லாதபட்சத்திலும் அல்லது உங்களுக்கு கொசுக்கடி உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடியபட்சத்திலும், உங்களுக்கு விஷசுரம் ஒருபோதும் வராது.

(3) கொசுக்கள் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால், தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுக்களும் இரா, விஷசுரமும் இராது.

(4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுக்களெல்லாவற்றையும் அழிப்பதவசியமில்லை; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலு

முள்ள கொசுக்களே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றி லும் கால்மைல் தூரம்வரையுமுள்ள பிரதேசத்தில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும்பட்சத்தில், கொசுக்கள் மிகவும் கொஞ்சமாயிருக்கும்; அல்லது இருக்கவேயிரா; விஷசுரமும் இராது. (Fort St. George Gazette).

நட்பு

செயற்கரிய யாவுள நட்பினதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

என்று பெருநாவலர் திருவாய்மலர்ந்தருளியபடி ஒருவனது ஆயுட்காலத்தில் ஸம்பாதித்துக்கொள்ளவேண்டியதான அரும் பொருள்களுள் நட்பை ஒரு பொருளெனவே மதித்தல் வேண்டும். ஆனல் அந்நட்பைப் பிரித்துப் பாற்குமிடத்து, அகநட்பு, முகநட்பு என இருவகையுள. அதாவது அகநட்பெனும் பதத்திற்கு உள்ளம் உவந்து அன்பு பாராட்டும் சினேகம் என்று பொருள்படும். அவை யாவன, தமக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாகவே எண்ணி அத்துன்பத்தை விட்டு இன்பமடைவிக்க முயலும் நண்பனது நட்பே நட்பு. முகநட்பானது ஒருவரை காணுந்தருணம் முகமாத்திரம் மலர்ந்து இனிமை பேசி வெளிச் சினேகம் பாராட்டி உள்ளில் கொடுங்குணமே குடிகொண்டிருக்கும், துட்டர்களது நட்பேயாகும். ஆகையால்

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை
கடைமுறை தான்சாந் துயரந் தரும்.

எனும் ஆப்த வாக்கியத்தை ஆராயப் புகுமிடத்து ஒருவனது துர்க்குண முதலியனவற்றைப் பார்த்தறியாமல் அவனோடு பாராட்டும் சினேகத்தால் இறுதியில் தாம் சாவதற்கேதுவான துன்பம் நேரிடுமென்பதற்கு எவ்வகைச் சந்தேகமுமில்லை. ஆனதால் வஞ்சனை, பொறுமை, பிறர் பொருளை இச்சித்தல், பொய் சொல்லல் முதலான தீச் செயல்களை வேரறக் களைந்தும் பழிபாவங்களுக்கஞ்சுதல் எனும் வாக்கியத்தை கடைப்பிடித்தும் ஒழுகிநடப்பவரெவரோ அவரோடு செய்த நட்பானது வளர்பிறைச் சந்திரனை ஒத்து செல்லச் செல்ல வளர்வதுந் தவிர,

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
குருத்தில் கரும்பு தின்றற்றே.

கரும்பை நுனியிலிருந்தே தின்னத்தொடங்குங்கால் போகப் போக எங்ஙனம் மதுரத்தைத் தருகின்றதோ அத்தன்மைபோலும் இன்பத்தைத் தருகின்றதேயொழிய துன்பமணுகாது. ஆகையினால் ஸற்குணமடைந்த ஒருவனை ஆராய்ந்து சிநேகம் பாராட்டவேண்டும்.

அன்பர்களே! மேற்சொன்ன சற்குணமுடைய ஒரு சிநேகனிருப்பானேயானால் நாமடையும் பயன் யாது என்று பார்க்குமிடத்து நமது சரீரத்தில் யாதேனும் வியாதிகள் நேரிடுமிடத்து மருத்துவர்களாலே நாம் சுகமடைகின்றோம். அதுபோல நம் மனதிலுண்டாகும் சந்தேகமுதலிய புண்ணுகளுக்கு நம் அந்தரங்க நண்பனெனும் மருத்துவரால் சாந்தியடைகின்றோமே ஒழிய வேறுயாவராலும் எதுமருத்துவராலும் இயலாது. ஆகையால் நம்முள்ளத்திலுதிக்கும் சந்தேகங்களை நம்நண்பன் மூலமாய் நிவர்த்திசெய்கிறோம். இன்னும், நம் நண்பனால் அளவிடக்கூடாததான அநந்தம் பிரயோஜனங்களைப் பெறலாம். அதை ஈண்டு கூறின்விரியும்.

ஒரு புருஷனைத் தன்னண்பராகவேமதித்து நடக்குங்கால், தமக்கப்புருடன் எவ்வளவு துன்பத்தை செய்தபோதிலும்பிரிவது நன்றன்று. "பேயோடு பழகினும் பிரிவதரிது" என்று பெரியோர் புகல்வதை நாம் கேட்கின்றோம். கற்றறிவாளரான பெரியோர் தம்மையுடுத்து நேசித்தவர் எக்காலத்தும் துன்பம்விளைவிப்பராயினும் அந்நண்பனை விட்டகலாதொழியாராயினும், பிரியநேருமிடத்து அவர்களுக்கு நல்லுரைகூறிப் பிரிவர். இதற்கோர் சாக்ஷியாக ஒருகதையை ஈண்டு கூறுவோம்.

கல்வியென்னும் வேலையின் கரைகண்ட கவிவாணர் ஒருவர், மிடியென்னும் நேயனைத் தன்னுற்ற நேயனைப்போலவே உறவாடிவந்தனர். ஆனால் மிடியென்னும் நண்பன் தம்மையணுகினதால், அம்மதிவீரனை மனைவி, புதல்வர் முதலான யாவரும் வெறுக்கலாயினர். வெறுத்தும் மிடியென்னும் நண்பனை விட்டகல மனம் ஸம்மதித்ததில்லை. ஆனால், அம்மிடியென்னும் நண்பன் அம்மகானை படாதுபடுத்தி துன்பஸாகரத்தில் அமிழ்த்தினன். எனினும் அம்மகான் "பேயோடு பழகினும் பிரிவதரிது" என்னும் முதுமொழியை கைக்

கொண்டவர் ஆகலான் நண்பனை விட்டகன்றிலிலை. இதுகளையெல்லாம்கண்ட செல்வமென்னும் தயாளன் அப்பெரியோருக்கு இடுக்கண் விளைவித்துக்கொண்டிருந்த மிடியென்னும் நண்பனை துரத்துவதற்கு யத்தனம் கொண்டனன். இதையறிந்த அக்கவிவாணர் தம்மோடு வெகுநாளாயிருந்த அந்நண்பனைவிட்டகல மனம் வராமல் நல்லுரை கூறிப்போந்தனர்.

நீளத்திரிந்து நின்றுப் நீங்காநிழல்போல
நாளைக்கிருப்பையோ நல்குரவே—காளத்தி
னின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே இரு.

என்னும பாவைப் பாடினர். இவர்படும் கஷ்டங்களுக் கிரங்கி, அம்மிடியென்னும் நண்பன் விட்டகன்றன்.

ஆ. நீலகண்டப்பிள்ளை.
சுசீந்திரம்

ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகளது வேத வசனங்கள்.

மனிதன் மிருகத்துவம், மனுஷியத்துவம், தெய்வத்துவம் ஆகிய இம்மூன்றின் சேர்க்கையேயாவன்.

* * *

"உஷ்ணமான பனிக்கட்டி" "இருட்டான பிரகாசம்" என்னும் வார்த்தைகளில் எவ்வளவு அர்த்தமிருக்கிறதோ, அவ்வளவு அர்த்தமே "ஜனசமூகாபிவிருத்தி" என்னும் வார்த்தையிலும் இருக்கிறது. முடிவில் "ஜனசமூகாபிவிருத்தி" என்ற ஒன்று கிடையாது.

* * *

வஸ்துக்களில் மாறுதல்களை உண்டாக்குவதினால் வஸ்துக்கள் நல்லஸ்திதியை அடைகின்றதில்லை, ஆனால் நாம் மென்மேலும் நல்ல ஸ்திதியை அடைகிறோம்.

* * *

எனது சகோதரர்களுக்குநான் சகாயம்செய்வேனாக! இதுவேஎனது இச்சை.

* * *

ஒரு வஸ்து உண்மையல்லாவிடில், அது இல்லவேயில்லை உண்மையல்லாத வஸ்துவிற்கு இருப்பு இல்லை. ஆச்சரியமான சம்பவங்களும் ஸ்வாபாவிகக் காட்சிகளே. அவைகளெல்லாம் சாஸ்திரீயமானவை தாமென்று நாம் அறிகிறோம். அவைகளெல்லாம் எனக்கு ரகஸ்யமானவையல்ல. இரம்ப சபைக

ளில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவைகள் நன்மை செய்கின்றனவல்ல. அவைகளால் ஒரு பொழுதும் நன்மையைச் செய்யமுடியாது.

* * *

நான் சத்தியத்தின் பக்கம் நிற்கிறேன். சத்தியமானது பொய்யுடன் ஒரு பொழுதும உறவாடாது. உலகனைத்தும் எனக்கு விரோதமாயினும் கூட, முடிவில் சத்தியமே ஜெயம் பெறும்.

* * *

சுகமானது தனது சிரத்தில் துக்கமென்னும் முடியைத் தரித்துக்கொண்டு மனிதனுக்கு முன் நிற்கிறது. சுகத்தை விரும்புகிறவன் துக்கத்தையும் விரும்பவேண்டும்.

* * *

சர்வசங்க பரித்தியாகம் செய்தவன் எவனோ, உலகை லட்சியம் செய்யாதவன் எவனோ, காமக்குரோதாதிகளை அடக்கியவன் எவனோ, உபசாந்தத்தை அடைய வேண்டுமென்ற ஆத்திரம் மிகுந்தவன் எவனோ, அவனே ஸ்வதந்திரன்; அவனே மகான். ஒருவன் ராஜரீக ஸ்வதந்திரத்தையும் ஜனசமூக ஸ்வதந்திரத்தையும் அடையலாம், ஆனால் அவன் ஆசைகட்கும் அவாக்கட்கும் அடிமையாயிருப்பானாயின், உண்மையான ஸ்வதந்திரத்தினின்று உண்டாகும் பரிசுத்த சுகத்தை அநுபவிக்க முடியாது.

* * *

பிறர்க்குதவி புரிதலே புண்ணியம். பிறரை இம்சித்தலே பாபம

* * *

பலமும் பௌருஷமும் புண்ணியம், பலயீனமும் பயங்காளித்தனமும் பாபம்.

* * *

ஸ்வதந்திரமே புண்ணியம், பரதந்திரமே பாபம.

* * *

பிறரை நேசித்தலே புண்ணியம், பிறரை வெறுத்தலே பாபம்.

* * *

ஈஸ்வரனிடத்திலும் தன்னிடத்திலும் நம்பிக்கையே புண்ணியம், சந்தேகமே பாபம்.

* * *

ஒன்றென்ற அறிவே புண்ணியம், பலவற்றைப் பார்த்தலே பாபம்.

* * *

பலவித சாஸ்திரங்களும் புண்ணியத்தை அடைவதற்குள்ள வழிகளையே காண்பிக்கின்றன. [ஞானபாநு]

சமாசாரத்திரட்டு.

நமது சக்ரவர்த்தியின் செலவு.

நமது காருண்ய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 172,000 பவுன் சொந்தச் செலவாம்.

ஆகாயக் கப்பல் சஞ்சாரிகள்.

உலகத்தில் இம்பொழுது 43 ஆகாயக்கப்பல்சஞ்சாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் பிராஞ்சியர் 26; ஆங்கிலேயர் 5; அமெரிக்கர் 1 ருஷியர் 2; இத்தாலியர் 2; மற்றவர்கள் அநேக சிறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

வர்த்தமானப் பத்திரிகைகள்.

லண்டன் மாநகரத்தில் மட்டும் 40 தினப் பத்திரிகைகள் நடைபெறுகின்றன. பிரித்தானியா தேசம் முழுவதிலும் 183 தினப் பத்திரிகைகளும் 2643 வாரப் பத்திரிகைகளும், 1482 மாதப் பத்திரிகைகளும் பிரசுரமாகின்றன. இங்கிலாந்தில் மட்டும் (லண்டன் நீங்கலாக) 138 தினப் பத்திரிகைகளும், 1365 வாரப் பத்திரிகைகளும் உண்டாம். உவேல்ஸ் நாட்டில் 8 தினப் பத்திரிகைகளும், 121 வாரப் பத்திரிகைகளும் ஸ்காட்லாந்தில் 18 தினப் பத்திரிகைகளும் 263 வாரப் பத்திரிகைகளும், அயர்லாந்தில் 19 தினப் பத்திரிகைகளும் 200 வாரப் பத்திரிகைகளும் வெளியாகின்றன. லண்டனில் மட்டும் வாரப் பத்திரிகை 694.

பால்க்கான் யுத்த நஷ்டம்.

பால்க்கான் யுத்தத்தினால் பல்கேரியா தேசத்தாருக்கு 110,000,000. பவுன்நஷ்டமாகின்றதாம்.

ஐரோப்பிய இராணிகளின் உடைச் செலவு.

ஸ்பானியா தேசத்து விக்றோரியா இராணிக்கு வருஷத்துக்கு 80000 பவுன்; ஜெர்மனி இராணிக்கு 4000 பவுன்; ருஷியா இராணிக்கு 4000 பவுன்; இத்தலியா இராணிக்கு 3200 பவுன்; பெல்ஜியம் இராணிக்கு 2000. நமது சக்ரவர்த்தினியாகிய மேரி இராணி

யார் தமது உடைகளை தமது மேற்பார்வையில் தமது அரண்மனையில் தானே செய்துகொள்ளுகிறபடியால் உடை விஷயமாக அவர்களுக்குச் செலவு மிகச் சொற்பமாம்.

கைக்கெடியாரம் உண்டுபண்ணும் குருடர்கள்.

கூன், குருடு, செவிடு, பேடு முதலிய அங்கஹீனர்களுக்கு மிகவும் அற்புதமான சக்தி தெய்வீகமாகவே அமைந்திருக்கிறது. இங்கிலாந்தில் ஹால்பாச் என்னுமிடத்தில் கைக்கெடியாரம் உண்டுபண்ணும் ஒருகுருடன் இருந்தானும். அவன் பெயர் ரிப்பின். அவன் எவ்வளவு நுட்பமான கடிகாரவேலைகளையும் அதி சீக்கிரத்தில் செய்து முடித்துவிடுவானும். ஒருநாள் அவனிடமிருந்த அனேக கடிகாரசாமான்களை யாரோ திருடிக்கொண்டார்களாம். திருடன் பிடிபட்டபொழுது அவனிடம் அனேக கடிகார சாமான்கள் இருந்தனவாம். ஆனால் நம்முடைய குருடன் தன் சாமான்களை ஸ்பரிசத்தால் உணர்ந்து எடுத்துக்கொண்டானும்.

உலகத்திலுள்ள தனவந்தர்களுள் மிகப் பெரிய தனவந்தர் வின்ஸென்ட் ஆஸ்டர் என்பவராம். இவர் இப்பொழுதுதான் மேஜராயிருக்கிறார். இவருடைய ஆஸ்தி 10 கோடி லாடர் அல்லது 3) கோடி ரூபாயாம்.

வங்காள மாகாணத்திலுள்ள ஷாம் யந்திரசாலையில் உத்தியோகமாகவிருக்கும் ஓர் ஐரோப்பியர் ஒரு வங்காள சித்திரவேலைக்காரனை சில வாரங்கட்குமுன் காலால் பலமாக வுதைத்து இறந்துபோமாறு செய்த குற்றத்திற்காக அவர்கு 15) ரூ அபராதம் விதிக்கப்பட்டார்.

இக்காலத்தில் மனிதர்கள் சராசரி 33 வருஷத்திற்குமேல் ஜீவித்திருப்பதில்லை. இப்போதிருப்பவர்களுள் நான்கிலொருபாகத்தார் 6 வயதுக்குமுன்னரே இறந்துபோகின்றனர். நூறுபேர்களிலொருவன் தான் 65 வயதுவரையில் ஜீவித்திருக்கின்றான்.

லண்டனில் வீடுதோறும் மின்ஸாரமூலமாகக் குழாய்களின் வழியாக வெந்நீர் கொடுக்க ஏற்பாடு செய்துவரப்படுகின்றது. உஷ்ண ஜலத்தில் ஸ்நானஞ்செய்வது அனேக வியாதிகளுக்குப் பரிகாரமென ஜனங்கள் வெந்நீரையே உபயோகிக்கிறார்களாம்.

ஜர்மன் தேசத்தைச் சேர்ந்த பிரஸ்லா நகரத்திற்கருகே பூமியை வெட்டித் தோண்டிக்கொண்டு போம்பொழுது, ஒரு கிராமம் காணப்பட்டது. அதில் 150 வீடுகளும், 400 சமாதிகளுமிருந்தனவாம். இக்கிராமம் 4 0 வருஷத்திற்குமுன் பூமியில் புதைந்து போயிருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது.

உலகத்திலுள்ள செடிகளில் மிக நீளமாயிருப்பது கடற்பாசியிலிருந்துண்டாகும் ஒருவகையான செடியாம். இது சுமார் 300 அடி நீளமுடையதாம். அச்செடியின் தண்டுகள் தென் சமுத்திரத் தீவில் உலர்த்தப்பட்டுக் கயிறாக உபயோகிக்கப்படுகின்றனவாம்.

அமேரிக்கா தேசத்துப் பெண்கள் கலியாணஞ்செய்துகொள்ள விரும்பும்போது தம்மிடத்துள்ள பணமெல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டித் தலைமீது வைத்துக்கொண்டு திரிவார்களாம். அவர்களை ஆடவர்கள் அம்மூட்டையினளவிற்கேற்றவாறாகக் கல்லியாணஞ் செய்துகொள்ளுவார்களாம்.

ஹவாயியன் தீவென ஒரு தீவு இருக்கின்றது. அதில் வசிக்கும் ஆடு மாடு குதிரை முதலியன எப்போதும் தண்ணீர் குடிப்பதில்லையாம். அங்கு மலைச்சாரிலுள்ள ஒருவகைப் புல்லே அவற்றிற்கு ஆகாரமாம். அப்புல் அவற்றிற்கு நீரும் ஆகாரமுமாக உபயோகப்படுகின்றதாம்.

மலையாளத்தில் ஆகாசத்திலிருந்து கற்கள் விழுந்தன.

போனவாரம் திங்கட்கிழமை காலை ஆகாயத்திலிருந்து பலத்த சப்தமொன்று உண்டாயிற்று. அந்த சப்தம் ஆகாயத்தில் இடி இடிக்கிற சப்தமென்று எல்லோரும் நினைத்தார்கள். பிறகு அது இடியின் சப்த மல்லவென்று தெரிய வந்தது. 100 பவுண்டு நிறையுள்ள ஆகாயக்கற்கள் பொன்னானியிலும்; திட்டூரிலும், திரிசூரங்காடியிலும், ருட்டிபுறத்திலும் தென்மலையாளத்திலுள்ள இன்னுஞ் சிலவிடங்களிலும் விழுந்தன. அவைகள் பூமிக்குள் 5 அல்லது 6 அடி ஆழத்திற்குள் போயின. கற்கள் அனைத்தும் துண்டு துண்டாகப் போகும்படியாய் அவ்வளவு வேகமாய் பூமியில் விழுந்தன. விழுந்தகற்களில் சிலவற்றைப் பொறுக்கி சென்னை மியூஸியத்திற்கு அனுப்புவார்கள் என்று சொல்லப்படுகிறது.